ஓம் சரவணஜோதியே நமோ நம

# ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

30.10.2025

1. வந்தேன் என்றருளும் கந்தனை
வணங்கியே கலியுக மக்கள்
எந்தன் பிரணவக் குடில் நோக்கி
இனிதே வந்திட அரங்கனும்

2. அரங்கனும் வேலவனுடன் சேர்ந்து
அருளியே சர்வ பாதுகாப்பு
வரங்களாகத் தந்தருள் புரிவோம்
வல்லமைபட விசுவாவசு துலை திங்கள்

3. திங்களிலே ஈராம் குருவார அருளாசி
தேசிகனும் அருட்சுவடி வழியில்
ஓங்கார பலம் மக்களடைய உரைப்பேன்
ஓங்கார குடிலை மக்கள் அணுகி

4. அணுகி அருளமுது உண்டு
ஆற்றல்மிக்க சோதி வழிபாடு
ஞானமோடு நன்மைதா எனவேண்டி
நம்பிக்கை வைத்து வருக

5. வருவதுடன் சுத்த நெறி கொண்டு
வருவாயில் பத்தில் ஒரு பங்கு
தருமவழி பொருளுதவி செய்து
தானென்ற கர்வம் அணுகா

6. அணுகா தயை காட்டு குருவேயென
அனுதினமும் ஞானிகள் பூசை
ஞானமோடு நற்குணமும் அமைய
நாளும் வேண்டி வருதல் காண

7. காணவே ஆறுமுக அரங்கனும்
கந்தனோடு வந்தருளியே
ஞானமோடு நல்ல பக்குவமும்
ஞானிகள் ஆகும் வாய்ப்பும் தந்தருள்வோம்

8. அருளவே கருமவினை தீரவே
அன்னதானம் எனும் தருமவழியே
பிரதான சக்தியாக இருக்கவே
பிரணவக்குடிலின் அன்னதான

9. அன்னதான சேவை வழிதனில்
அணுகிப் பொருளுதவி செய்து
அண்ணலே காப்பாய் என
அனைவரும் சரணாகதி காண

10. காணவே ஞானிகள் ஆசியும்
கருணைமிக்க அனுகூலம் கூடி
ஞானவான்கள் எனும் சக்தி
நாடெங்கிலும் பெருகி இனிதே

11. இனிதே நல்லாட்சி ஞான ஆட்சி
இவ்வுலகை காக்கும் வண்ணம்
கனிவேலவன் இறங்கிட மாற்றம்
கலியுகத்தில் சடுதி நடந்தேறும்
ஆறுமுக அரங்கமகான் குருவார அருளாசி முற்றே.

—சுபம்—

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி